வெளியீடு: 25

# ஔவையார் அருளிய

# ஆத்திசூடி



வெளியீடு:
அண்ணா தொழிலகம் - இணுவில்.
021 2241565, 0112 2436063.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இவ்வுலகம் இறைவனால் இனிதே படைக்கப்பட்டுள்ளது. ஆறறிவுடைய மனிதனைப் படைத்த இறைவன், அரிய பிறவியை அறவழியில் காத்துக்கொள்ளவென அறைகூவல் விடுத்துள்ளான். "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்பது இறையுண்மை. "உண்மையே உயர் அறம்" என்று உத்தமர்கள் உலகுக்கு எடுத்துரைத்தனர். சைவத் தமிழர்களின் வாழ்வு அறநெறிப் பட்டதே. அறநெறியில் மக்கள் வாழ்வதற்காக அரிய நூல்கள் எம்மூத்தோரால் படைக்கப்பட்டன. அறத்தமிழ் நூல்கள் வரிசையில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, திருக்குறள், நாலடியார் போன்றவை அற்புதமானவை.

எம்மண்ணில் மனிதநேயம், கருணை, இறைபக்தி, அன்பு, அரவணைப்பு, தியாகம் என்பவற்றை பேணுவதற்கு காலத்துக்குக் காலம் அறநூல்களைச் சான்றோர் வெளியிட்டு மழலைகளை நெறிப்படுத்த அரும்பாடுபட்டுள்ளனர். அவ்வகையில் இன்றும் எம் மண்ணில் அறச் சிந்தனைகளை இளைய தலைமுறையினருக்கு வழங்கவேண்டும் என்ற பேராவலோடு வாழ்பவர் ஸ்ரீமான் பொ.நடராசா J.P (அண்ணா நிறுவன அதிபர்) அவர்கள்.பயன்தரு நூல்களை காலத்திற்குக் காலம் அச்சேற்றி இலவசமாக வழங்குகின்ற இனிய தொண்டை அவர் தொடர்ந்து செய்துகொண்டிருப்பது நாம் செய்த பாக்கியமே. இப்பெருந்தகை ஆற்றும்பணி போற்றுதற்குரியது. இவரது தந்தை நிறைந்த கடவுள் பக்தியுடைய கண்ணியமான மனிதன். அவரது ஆற்றுப்படுத்தலில் வளர்ந்து, உழைப்பால் உயர்ந்தவர் ஸ்ரீமான் பொ. நடராசா அவர்கள். பாடுபட்டு உழைப்பவர். காடு திருத்தி நாடு காண முனைபவர். சிவநெறிக் காவலர் மில்க்வைற் கனகராசா அவர்களுடன் இணைந்து தர்மப்பணிகள் பல செய்தவர். பல நூறு பேருக்குத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக் கொடுத்து வாழ வழிகாட்டி வருபவர். நல்வழி காட்டும் ஔவையாரின் ஆத்திசூடி என்னும் அறநூலை வெளியிடுவது போற்றுதற்குரியது.

**இசையும் எனினும் இசையா தெனினும்**
**வசைதீர எண்ணுவர் சான்றோர் - விசையின்**
**நரிமா உளங்கிழித்த அன்பினின் தீதோ,**
**அரிமாப் பிழைப்பெய்த கோல்?**

***நாலடியார்***

அரிய காரியங்களிலேயே அனுதினமும் எண்ணிச் செய்வது மேன்மக்களின் இயல்பு என்ற நாலடியார் கருத்துக்கு ஒப்ப இந் நூலை வெளியிடும் அண்ணா நிறுவன அதிபர் திரு.நடராசா அவர்களை மனமார வாழ்த்தி, மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டும் இந்நீதி நூலை இனிதே படித்து இனியவராக வாழ அனைவரையும் வேண்டி அமைகிறேன்.

இணுவில்

செஞ்சொற்செல்வர்
**ஆறு. திருமுருகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையாரின் ஆத்திசூடி

## காப்பு

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்தி – திரு ஆத்திப் பூ மாலையை; சூடி – சூடியிருக்கும் சிவபிரானுடைய; அமர்ந்த – அன்பிற்குரிய; தேவனை – விநாயகக் கடவுளை; ஏத்தி ஏத்தி – எப்பொழுதும் துதித்து, தொழுவோம் – வணங்குவோம்.

திருஆத்திப் பூமாலையை அணிந்திருக்கும் சிவபெருமானின் அன்புமிக்க பிள்ளையாகிய விநாயகக் கடவுளை நாம் எப்பொழுதும் வழிபட்டு வணங்குவோமாக.

## நூல்

1) **அறஞ்செய விரும்பு**
அறம் – தர்மம்; செய – செய்வதற்கு; விரும்பு – விருப்பம் கொள். நற்கருமங்களைச் செய்வதற்கு ஆசை கொள்ளவேண்டும்.

2) **ஆறுவது சினம்**
ஆறுவது – அடங்கவேண்டியது; சினம் – கோபமேயாகும். தணியவேண்டியது கோபமேயாகும்.

3) **இயல்வது கரவேல்**
இயல்வது – உன்னால் செய்யமுடிவதை; கரவேல் – செய்யாமல் மறைத்து வைக்காதே.
நம்மால் முடிந்ததை ஒளியாமல் செய்யவேண்டும்.

4) **ஈவது விலக்கேல்**
ஈவது – கொடுப்பதை; விலக்கேல் – நீ தடை செய்யாதே; பிறருக்குக் கொடுப்பதைத் தடுத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) **உடையது விளம்பேல்**

உடையது – உன்னிடம் உள்ள திறமைகளை; விளம்பேல் – ஊர் அறியச் சொல்லாதே.

நன் திறமைகளை வெளியே சொல்லக்கூடாது.

6) **ஊக்கமது கைவிடேல்**

ஊக்கம் – உற்சாகத்தை, கைவிடேல் – இழந்துவிடாதே.

ஒரு காரியம் செய்யும்போது தடை ஏற்படுமானால் அது கண்டு உற்சாகம் குன்றிவிடலாகாது.

7) **எண் எழுத்து இகழேல்**

எண் – விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அடிப்படையான எண்ணையும்; எழுத்து – இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையான எழுத்தையும்; இகழேல் – அலட்சியப்படுத்தாதே.

கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்குதல் ஆகாது.

8) **ஏற்பது இகழ்ச்சி**

ஏற்பது – ஒருவரிடம் போய் இரப்பது; இகழ்ச்சி – கேவலம்.

பிறரிடம் யாசிப்பது இழிவு தருவதாகும்.

9) **ஐயம் இட்டு உண்**

ஐயம் – பிச்சை கேட்பவர் எவராவது இருந்தால் அவருக்கு; இட்டு – பிச்சை போட்டபிறகு; உண் – நீ சாப்பிடு.

பிச்சையிட்டுப் பின்னர் உண்ணுதல் வேண்டும்.

10) **ஒப்புரவு ஒழுகு**

ஒப்புரவு – உலகத்தின் போக்கு அறிந்து; ஒழுகு – அதன்படி நடந்துகொள்.

உலகத்தின் போக்கு எப்படி என்று அறிந்து; அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) **ஓதுவது ஒழியேல்**

ஓதுவது – படிப்பதை; ஒழியேல் – விட்டுவிடாதே.

எக்காரணத்தை முன்னிட்டும் படிப்பதை விட்டு விடலாகாது.

12) **ஔவியம் பேசேல்**

ஔவியம் – பொறாமை கொண்டு, பேசேல் – பேசாதே.

பொறாமை வார்த்தைகளைப் பேசுவது கூடாது.

13) **அஃகஞ் சுருக்கேல்**

அஃகம் – தானியங்களை; சுருக்கேல் – அளவில் குறைத்து விற்காதே.

அளவைக் குறைத்துத் தானிய வியாபாரம் செய்தலாகாது.

14) **கண்டு ஒன்று சொல்லேல்**

கண்டு – ஒன்றைக் கண்டு; ஒன்றுகாணாத வேறு ஒன்று; சொல்லேல் – சொல்லாதே.

கண்ணால் கண்டதத்கு மாறாக எதுவும் கூறாதே. கண்டபடியே சொல்வாயாக.

15) **ஙப்போல் வளை**

ஙப்போல் – ங என்னும் எழுத்தைப்போல; தான் பிரயோசன முள்ளதாய் இருந்து தன் வர்க்கத்தைத் தழுவுதல், வளை – மற்றவரை ஆதரி. (நீ பிரயோசனமுள்ளவனாயிருந்து உன் இனத்தைத் தழுவு)

'ங' எனும் எழுத்தைப் போன்று அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டும்.

16) **சனி நீராடு**

சனி – சனிக்கிழமை தோறும்; நீர் ஆடு – எண்ணெய் தேய்த்து நீரில் முழுகு.

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்து தலை முழுக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17) ஞயம்பட உரை**

ஞயம்பட – இனிமை உண்டாகும் விதத்தில்; உரை – நீ சொல்லு. கேட்பவர்களுக்கு இன்பம் உண்டாகும் விதமாகப் பேசு. அதாவது இனிமையாகப் பேசுதல் வேண்டும்.

**18) இடம்பட வீடு எடேல்**

வீடு – வீட்டை; இடம்பட – தேவைக்கு அதிகமான இடம் வெறுமையாகக் கிடக்கும்படி; எடேல் – கட்டாதே.

அளவுக்கு மேல் இடம் வீணில் கிடக்க வீடு கட்டுதல் கூடாது.

**19) இணக்கம் அறிந்து இணங்கு**

இணக்கம் – ஒருவனுடன் சிநேகிதம் செய்யுமுன் இவனுடன் சிநேகம் செய்யலாமா என்று; அறிந்து – ஆராய்ந்து; இணங்கு – பிறகு சிநேகஞ் செய்.

ஒருவர் நல்ல குணமுடையவர் தானா என்பதை அறிந்து அதன்பின் அவருடன் நட்புக் கொள்ளவேண்டும்.

**20) தந்தை தாய் பேண்**

தந்தை தாய் – பெற்றோரை; பேண் – ஆதரித்து அன்புடன் காப்பாற்று.

தாய் தந்தையரை அன்புடன் ஆதரித்துப் பாதுகாக்க வேண்டும்.

**21) நன்றி மறவேல்**

நன்றி – ஒருவர் உனக்குச் செய்த நலனை; மறவேல் – நீ மறக்காதே.

ஒருவர் செய்த நன்மையை ஒருபோதும் மறந்துவிடலாகாது.

**22) பருவத்தே பயிர் செய்**

பருவத்தே – தகுந்த காலத்திலே; பயிர் செய் – பயிரிடத் தொடங்கு.

உரிய காலம் அறிந்து காரியம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23) மன்று பறித்து உண்ணேல்**

மன்றுபறித்து – பிறரது நிலத்தைப் பிடுங்கி; உண்ணேல் – நீ வாழ்க்கை நடத்தாதே.

பிறர் நிலத்தை அபகரித்து சீவனம் பண்ணாதே.

**24) இயல்பலாதன செயேல்**

இயல்பு அலாதன – தருமத்துக்கு மாறான காரியங்களை, செயேல் – செய்யாதே.

தருமத்துக்கு மாறுபட்ட காரியங்களை நீ செய்தல் கூடாது.

**25) அரவம் ஆடேல்**

அரவம் – பாம்புடன்; ஆடேல் – விளையாடாதே.

பாம்புடன் விளையாடுதல் கூடாது.

**26) இலவம் பஞ்சில் துயில்**

இலவம் பஞ்சில் – இலவம் பஞ்சு அடைத்த மெத்தையிலே; துயில் – படுத்து உறங்கு.

இலவம் பஞ்சினால் செய்த மெத்தையிலே நீ நித்திரை கொள்.

**27) வஞ்சகம் பேசேல்**

வஞ்சகம் – கபடமான வார்த்தை; பேசேல் – பேசாதே.

கபடமாக வார்த்தை பேசுதலாகாது.

**28) அழகு அலாதன செயேல்**

அழகு அலாதன – (துன்பம் வந்த காலத்தும்) இழிவுடைய எக்காரியத்தையும்; செயேல் – செய்யாதே.

துன்பம் வந்த காலத்தும் இழிசெயல் புரிதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29) இளமையில் கல்**

இளமையில் – இளமைப் பருவத்திலேயே; கல் – கல்வி கற்றுக் கொள்.

இளமையிலேயே நீ கற்றுக்கொள்ள, படிக்க வேண்டும்.

**30) அரனை மறவேல்**

அரனை – கடவுளை; (நீ ஒருபோதும்) மறவேல் – மறவாதே.

கடவுளை மறக்கக்கூடாது.

**31) அனந்தல் ஆடேல்**

அனந்தல் – கடலில்; ஆடேல் – நீந்தி விளையாடாதே.

கடலில் நீந்தி விளையாடக் கூடாது.

**32) கடிவது மற**

கடிவது – சினந்து பேசுவதை; மற – மறந்து விடு.

கோபம் உண்டாக்கும் வார்த்தைகளை மறந்துவிட வேண்டும்.

**33) காப்பது விரதம்**

காப்பது – உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் பாதுகாப்பதே; விரதம் – நோன்பாகும்.

பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் காப்பதே நோன்பு.

**34) கிழமைப் படவாழ்**

கிழமைப்பட – உன்னிடத்தில் உள்ள பொருள் பிறர்க்கு உரிமை உண்டாகும் விதமாக; வாழ் – வாழ்வாயாக.

உடலும் பொருளும் பிறர்க்கே உரிமைப்படும்படி வாழ வேண்டும்.

**35) கீழ்மை அகற்று**

கீழ்மை – இழிவான செயல்களை; அகற்று – நீக்கி விடு.

இழிவான செயல்களை நீக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36) குணமது கைவிடேல்**

குணமது – மேலாகிய நல்ல குணங்களை; கைவிடேல் – நீ விட்டுவிடாதே.

நல்ல குணங்களை விட்டுவிடலாகாது.

**37) கூடிப் பிரியேல்**

கூடி – நல்லவருடன் கூடி; பிரியேல் – பிரியாதே.

நல்லவருடன் சினேகம் செய்து, பிறகு அவரை விட்டு நீங்குதல் கூடாது.

**38) கெடுப்பது ஒழி**

கெடுப்பது – மற்றவர்களைக் கெடுக்கக்கூடிய காரியங்களை; ஒழி – செய்யாது விட்டு ஒழி.

பிறருக்குக் கெடுதல் செய்வதை விட்டுவிட வேண்டும்.

**39) கேள்வி முயல்**

கேள்வி – கற்றவர் சொல்லும் பொருள் கேட்டு ஆராய்ந்து அறிவைப் பெருக்கிக்கொள்ள; முயல் – முயற்சி செய்.

கற்றவர் கூறுவனவற்றைக் கேட்பதற்கு நீ முயற்சி செய்.

**40) கைவினை கரவேல்**

கைவினை – உனக்குத் தெரிந்த கைத்தொழிலை; கரவேல் – (நீ மற்றவர்களுக்கு) ஒழிக்காதே.

உனக்குத் தெரிந்த கைத்தொழிலைப் பிறருக்கு ஒழிக்காதே.

**41) கொள்ளை விரும்பேல்**

கொள்ளை – பிறர் பொருளை அபரிக்க; விரும்பேல் – ஆசைப்படாதே.

பிறர் பொருளைக் கொள்ளையிட ஒருபோதும் விரும்புதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42) கோதாட்டு ஒழி**

கோது – குற்றமுள்ள; ஆட்டு – விளையாடல்களை. ஒழி – விட்டுவிடு

குற்றமுள்ள விளையாடல்களில் ஈடுபடலாகாது.

**43) சக்கர நெறி நில்**

சக்கர நெறி – அரசனுடைய ஆஞ்ஞையாகிய சக்கரம் செல்லும் வழியிலே; நில் – அடங்கி நில்.

அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நடக்கவேண்டும்.

**44) சான்றோர் இனத்திரு**

சான்றோர் – அறிஞர்களுடைய; இனத்து – கூட்டத்திலே; இரு – எப்போதும் இரு.

அறிஞர்கள் நிறைந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுவாயாக.

**45) சித்திரம் பேசேல்**

சித்திரம் – மெய்போலத் தோன்றும் பொய்யான வார்த்தைகளை, பேசேல் – பேசாதே.

பொய்யை மெய்போல் சித்தரித்துப் பேசுதலாகாது.

**46) சீர்மை மறவேல்**

சீர்மை – புகழுக்கு ஏதுவாகிய செயலை, மறவேல் – மறவாதே.

புகழுக்குக் காரணமானவைகளை மறந்து நடக்கலாகாது.

**47) சுளிக்கச் சொல்லேல்**

சுளிக்க – கேட்பவர் முகம் சுளிக்கும்படியான சொற்களை; சொல்லேல் – சொல்லாதே.

கேட்பவர் முகம் சுளிக்கும்படி நீ பேசுதல் கூடாது.

**48) சூது விரும்பேல்**

சூது – சூதாடுவதை, விரும்பேல் – விரும்பாதே.

சூதாடுதலை ஒருபோதும் நீ விரும்பலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**49) செய்வன திருந்தச் செய்**

செய்வன – செய்யும் காரியங்களை; திருந்த – திருத்தமாக; செய் – செய்வாயாக.

செய்யும் காரியங்களைத் திருத்தமாகச் செய்யவேண்டும்.

**50) சேரிடம் அறிந்து சேர்**

சேர் இடம் அறிந்து – அடையத்தகும் (நன்மையாகிய) இடத்தை, அறிந்து – தெரிந்து, சேர் – நீ அடை.

நன்மையடையத் தகும் இடத்தைத் தெரிந்து அங்கு சேர்.

**51) சை எனத் திரியேல்**

சை என – பார்ப்பவர் சீ என்று சொல்லி இகழும்படியாக; திரியேல் – திரியாதே.

பலரும் சீ என்று வெறுக்கும்படி துட்டனாய்த் திரியலாகாது.

**52) சொல் சோர்வு படேல்**

சொல் – ஒருவருடன் பேசும்போது, சோர்வு படேல் – குறைகூறும் வகையில் தளர்ந்து பேசாதே.

மற்றவருடன் பேசும்போது உற்சாகம் குன்றிச் சோர்வுடன் பேசுதலாகாது.

**53) சோம்பித் திரியேல்**

சோம்பி – முயற்சி இல்லாது சோம்பேறியாக; திரியேல் – திரியாதே.

முயற்சி செய்யாது சோம்பல் கொண்டு வீணாகத் திரியாதே.

**54) தக்கோன் எனத்திரி**

தக்கோன் என – யோக்கியன், தகுதியுடையவன் என்று எல்லோரும் புகழும் விதத்தில்; திரி – நடந்துகொள்.

தகுதியுடையவன் என்று எல்லோரும் புகழும் விதத்தில் நடந்து கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**55) தானமது விரும்பு**

தானம் அது – நல்லவர்களுக்குத் தானம் கொடுக்க; விரும்பு – ஆசை கொள்ளு. தானம் செய்ய விருப்பம் கொள்ள வேண்டும்.

**56) திருமாலுக்கு அடிமை செய்**

திருமாலுக்கு – விஷ்ணுவுக்கு; அடிமை செய் – தொண்டு செய். திருமாலுக்குத் தொண்டு செய்வாயாக.

**57) தீவினை அகற்று**

தீவினை – பாவச் செயல்களை; அகற்று – செய்யாதே. பாவச் செயல்களை நீக்கிவிடல் நன்று.

**58) துன்பத்திற்கு இடங் கொடேல்**

துன்பத்திற்கு – முயற்சியினால் ஏற்பட்ட துன்பத்துக்கு; இடம் கொடேல் – இடம் கொடாதே. (முயற்சியை விடாது செய்) முயற்சியினால் வரும் துன்பத்துக்கு இடம் கொடுக்காது மீண்டும் முயல்வாயாக.

**59) தூக்கி வினை செய்**

நன்றாகச் சிந்தித்துப் பார்த்து; வினை செய் – எந்தக் காரியத்தையும் செய்வாயாக.

நன்றாக யோசித்து அதன்பிறகே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும்.

**60) தெய்வம் இகழேல்**

தெய்வம் – தெய்வத்தை, இகழேல் – இகழ்ச்சியாகப் பேசாதே. கடவுளை இகழக்கூடாது.

**61) தேசத்தோடு ஒத்துவாழ்**

தேசத்தோடு – நீ வசிக்கும் நாட்டிலுள்ளவர்களுடன்; ஒத்துவாழ் – (பகையின்றி) ஒற்றுமையாக வாழ்.

தேசத்து மக்களுடன் ஒத்து வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**62) தையல் சொல் கேளேல்**

தையல் – உன் மனைவி கூறும்; சொல் – இழிவான பேச்சை கேளேல் – கேட்டு அதன்படி நடக்காதே.

மனைவியின் இழிந்த சொற்கேட்டு நடக்காதே.

**63) தொன்மை மறவேல்**

தொன்மை – பழமையானவற்றை; மறவேல் – மறந்துவிடாதே.

பழைமையை மறந்துவிடலாகாது.

**64) தோற்பன தொடரேல்**

தோற்பன – தோல்வி பெறுவது நிச்சயம் என்று தெரிந்தால் அவைகளை; தொடரேல் -- தொடர்ந்தும் செய்யாதே.

தோல்வி தரும் செயல்களில் மீண்டும் ஈடுபடலாகாது.

**65) நன்மை கடைப்பிடி**

நன்மை – நல்ல காரியம் செய்வதையே; கடைப்பிடி – உறுதி யாகக் கொள்.

நல்ல காரியம் செய்தலையே, உறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

**66) நாடு ஒப்பனை செய்**

நாடு – உன் நாட்டிலே உள்ளவர் பலரும்; ஒப்பன – ஒத்துக் கொள்ளக்கூடிய செயல்களையே; செய் – செய்வாயாக.

நாட்டிலே உள்ளவர் பலரும் ஒத்துக்கொள்ளக்கூடிய நல்ல காரியங்களையே செய்ய வேண்டும்.

**67) நிலையிற் பிரியேல்**

நிலையில் – உயர்ந்த நிலையிலிருந்து; பிரியேல் – கீழே இறங்கிவிடாதே.

இருக்கும் உயர்நிலையிலிருந்து கீழ்நிலைக்கு இறங்கிவிடலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68] **நீர்விளை யாடேல்**

நீர் – (ஆழமுள்ள) வெள்ளத்திலே; விளையாடேல் – நீந்தி விளையாடாதே.

வெள்ளத்தில் நீந்தி விளையாடல் கூடாது.

69] **நுண்மை நுகரேல்**

நுண்மை – நோய் தரும் உணவை; நுகரேல் – உட்கொள்ளாதே.

நோய் தரும் உணவுகளை உட்கொள்ளக்கூடாது.

70] **நூல் பல கல்**

நூல் பல – அறிவை வளர்க்கும் நூல் பலவற்றையும்; கல் – கற்பாயாக.

அறிவு வளர்ச்சிக்கான நூல்கள் பலவற்றையும் விடாது கற்பாயாக.

71] **நெற்பயிர் விளை**

நெற்பயிர் – நெற்பயிரை; விளை – சாகுபடி செய்.

நெல்லுப் பயிரை விளைவித்தல் வேண்டும்.

72] **நேர்பட ஒழுகு**

நேர்பட – (உன் ஒழுக்கம் கோணாது) செவ்வைப்பட; ஒழுகு – நட.

நேர்மையாக நடந்து கொள்.

73] **நைவினை நணுகேல்**

நைவினை – கெடத்தக்க செயல்களின் பக்கம்; நணுகேல் – போகாதே

ஒருவரைக் கெடுக்கும் செயல்கள் பக்கம் ஒருபோதும் செல்லாதே.

74] **நொய்ய உரையேல்**

நொய்ய – பயன் இல்லாத அற்பத்தனமான வார்த்தைகளை; உரையேல் – பேசாதே.

பயன் அற்ற வார்த்தைகளைப் பேசுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**75) நோய்க்கு இடம் கொடேல்**

நோய்க்கு – வியாதிக்கு; இடம் கொடேல் – இடம் கொடாதே.

வியாதி உண்டாக இடம் கொடுக்கக்கூடாது.

**76) பழிப்பன பகரேல்**

பழிப்பன – பிறர் பழிக்கத்தக்கவற்றை; பகரேல் – சொல்லாதே.

பிறர் பழிக்கும் இழி சொற்களைக் கூறுதலாகாது.

**77) பாம்பொடு பழகேல்**

பாம்பொடு – பாம்புடனே; பழகேல் – பழகாதே.

பாம்புடன் பழகுதல் கூடாது.

**78) பிழைபடச் சொல்லேல்**

பிழைபட – பிழையான கருத்துக் கொள்ளும்படி; சொல்லேல் – எதுவும் பேசாதே.

குற்றம் தோன்றப் பேசுதல்கூடாது.

**79) பீடு பெறநில்**

பீடு – பெருமை, பெற – பெறும் விதத்தில்; நில் – நிலைபெற்று நட.

பெருமை பெறத்தக்க வழியிலே நிற்க வேண்டும்.

**80) புகழ்ந்தாரைப் போற்றி வாழ்**

புகழ்ந்தாரை – உலகத்தில் புகழ்பெற்று வாழ்ந்தவர்களை; போற்றி – வணங்கி; வாழ் – அவர் காட்டிய வழியிலே வாழ்வாயாக.

உலகம் புகழும் பெரியவர்களைப் போற்றி அதன்படி வாழ்.

**81) பூமி திருத்தி உண்**

பூமி – பயிர் செய்யும் நிலத்தை; திருத்தி – நன்றாகச் சீர் திருத்திப் பயிர் செய்து; உண் – விளைத்த தானியத்தை உண்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**82) பெரியாரைத் துணைக்கொள்**

பெரியாரை – அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த பெரியவர்களை; துணைக்கொள் – உனக்குத் துணையாகக் கொள்ளவேண்டும்.

பெரியவர்களை உனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

**83) பேதமை அகற்று**

பேதமை – அறியாமையை; அகற்று – நீக்கு

அறியாமையைப் போக்க வேண்டும்.

**84) பையலோடு இணங்கேல்**

பையலோடு – அறிவின்றித் திரியும் பிள்ளைகளோடு; இணங்கேல் – சேராதே.

அறிவிலிகளான சிறுவர்களுடன் சேரலாகாது.

**85) பொருள்தனைப் போற்றி வாழ்**

பொருள் தனை – திரவியத்தை போற்றி – பேணிக்காத்து; வாழ் வாயாக.

பொருளை வீண் செலவு செய்யாமல் பாதுகாத்து வாழ வேண்டும்.

**86) போர்த் தொழில் புரியேல்**

போர்த் தொழில் – சண்டையாகிய தொழிலை; புரியேல் – செய்யாதே வீணான சண்டை சச்சரவுகள் செய்யாதே.

**87) மனம் தடுமாறல்**

மனம் – உள்ளம்; தடுமாறேல் – கலங்காதே.

எதுகண்டும் மனம் தடுமாறுதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**88) மாற்றானுக்கு இடம் கொடேல்**

மாற்றானுக்கு – பகைவனுக்கு; இடம் கொடேல் – இடம் கொடாதே.

பகைவனுக்கு இடம் கொடுக்கக்கூடாது.

**89) மிகைபடச் சொல்லேல்**

மிகைபட – எந்தக் காரியத்தையும் அளவுக்கு மீறி;

சொல்லேல் – சொல்லாதே.

அளவுக்கு மீறி எதையும் கூறுதல் ஆகாது.

**90) மீதூண் விரும்பேல்**

மீதூண் – அதிகமாகச் சாப்பிட; விரும்பேல் – விரும்பாதே.

அதிகமாக உண்ண ஆசைப்படாதே.

**91) முனை முகத்து நில்லேல்**

முனைமுகத்து – போர் முனையிலே; நில்லேல் – ஆயுதமின்றி நில்லாதே.

போர் முனையிலே ஆயுதம் இன்றி நில்லாதே.

**92) மூர்க்கரோடு இணங்கேல்**

மூர்க்கரோடு – முரடர்களுடனே; இணங்கேல் – சிநேகிதம் செய்யாதே.

**93) மெல்லினல்லாள் தோள் சேர்**

இல் – வீட்டிலே; மெல் – மெல்லிய; நல்லாள் – நல்ல குணமுள்ள பெண்ணுடன்; தோள் சேர் – சேர்ந்து வாழ்.

மனைவியுடன் இன்பமாக சேர்ந்து வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 94) மேன்மக்கள் சொல் கேள்

மேன் மக்கள் – உயர்ந்த குணமுள்ளவர்களது; சொல் – வார்த்தைகளை, கேள் – கேட்டுநட.

நல்லொழுக்கமுடைய பெரியார்கள் கூறும் புத்திமதிகளைக் கேட்க வேண்டும்.

### 95) மைவிழியார் மனை அகல்

மை விழியார் – மை தீட்டிய கண்களையுடைய ஒழுக்கமில்லாத பெண்களின், மனை அகல் – வீட்டுப்பக்கம் போகாதே.

விலைமாதர் வீட்டுவழி ஒருபோதும் போகாதே.

### 96) மொழிவது அற மொழி

மொழிவது – சொல்வதை; அற – சந்தேகத்துக்கு இடமில்லாமல்; மொழி – சொல்.

சொல்வதை ஐயம் திரிபு அறச் சொல்ல வேண்டும்.

### 97) மோகத்தை முனி

மோகத்தை – ஆசையை; முனி – கோபித்து விரட்டு,

ஆசையைக் கோபித்து விரட்டிவிட வேண்டும்.

### 98) வல்லமை பேசேல்

வல்லம – உனது சாமர்த்தியத்தைப் பற்றி; பேசேல் – நீயே புகழ்ந்து பேசாதே.

சுய சாமர்த்தியத்தைப் பெரிதாகப் பேசலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**99) வாது முற்கூறேல்**

வாது – விவாதம் செய்வதற்கு; முற்கூறேல் – முன்னே சென்று எவரையும் அழைக்காதே.

வீண் வாதங்களுக்கு முற்பட்டு பிறரை அழைக்கலாகாது.

**100) வித்தை விரும்பு**

வித்தை – கலைகளை; விரும்பு – விரும்பிக் கற்றுக்கொள்.

கல்விப் பொருளை விரும்பிக் கற்க வேண்டும்.

**101) வீடு பெயற நில்**

வீடு பெற – மோட்சத்தை அடையும் நல்ல வழியிலே, நில் – நிற்பாயாக.

முத்திபெறும் வழியிலே ஒழுக வேண்டும்

**102) உத்தமனாய் இரு**

உத்தமனாய் – உயர்ந்த குணமுடையவனாக; இரு – வாழ்ந்திரு.

உத்தமனாக வாழவேண்டும்.

**103) ஊருடன் கூடி வாழ்**

ஊருடன் – ஊராருடன்; கூடி – ஒற்றுமையாக இணைந்து; வாழ் – வாழ்வாயாக.

ஊரவர்களுடைய நன்மை தீமைகளில் கலந்து கொண்டு ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**104) வெட்டெனப் பேசேல்**

வெட்டென – வெடுக்கென்று; பேசேல் – பேசாதே.
ஒருவருடன் கடினமாகப் பேசலாகாது.

**105) வேண்டி வினை செய்யேல்**

வேண்டி – (யாதொரு பிரயோசனத்தை விரும்பி) அதாவது, வேண்டுமென்றே; வினை செய்யேல் – தீய காரியம் செய்யாதே.
வேண்டுமென்றே தீமை செய்யக்கூடாது.

**106) வைகறைத் துயில் எழு**

வைகறை – விடியற்காலையில்; துயில் எழு – தூக்கம் கலைந்து எழுவாயாக.
விடியற் காலத்திலே தூக்கம் விழித்து எழவேண்டும்.

**107) ஒன்னாரைத் தேறல்**

ஒன்னாரை – பகைவர்களை; தேறல் – நம்பாதே.
பகைவர்களை ஒருபோதும் நம்பக்கூடாது.

**108) ஓரம் சொல்லேல்**


ஓரம் – ஒருதலைப்பட்சமாகக் சொல்லேல் – எதுவும் சொல்லாதே.
ஒருதலைப்பட்சமாகப் பேசக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org